பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

19 10 2025 7.15

ஞாயிற்றுக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தீபாவளிப் பண்டிகையை பாதுகாப்புடனும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் கொண்டாடுமாறு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

- வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

- கர்நாடக மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதிக்காக ஆயிரத்து 950 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

- உத்தரப்பிரதேசத்தின் அயோத்தியாவில் கின்னஸ் சாதனைக்கான தீபத் திருவிழா இன்று நடைபெற்றது.

- உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 289 ரன் என்ற இலக்கினை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை பாதுகாப்புடனும், சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையிலும் கொண்டாடுமாறு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டுள்ளார்.

தீபாவளிப் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டின் புகழ்பெற்ற பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி திகழ்கிறது என்று திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், தீமையை நன்மை வெற்றிகொண்டதை குறிக்கும் வகையில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளில் நாட்டு மக்கள் அனைவருக்கும் அமைதி மற்றும் வளம் கிடைக்கட்டும் என்று பிரார்த்திப்பதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதை தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

முதற்கட்டமாக அடுத்த மாதம் 6ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில் 121 தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இரண்டாம்கட்டமாக அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்காக 122 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளை முதற்கட்டமாக ஆய்வு செய்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் எளிதில் புகார் தெரிவிக்கும் வகையில் பார்வையாளர்கள் செயல்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இரண்டு கட்டங்களிலும் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14ஆம் தேதி எண்ணப்பட உள்ளன.

<<<<>>>>

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்த பணிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இப்பிரச்சினையை எதிர்க்கட்சிகள் தேவையின்றி அரசியலாக்குவதாக குறை கூறினார்.

வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வது தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்ட சட்ட ரீதியிலான பணி என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

இதற்கிடையே மகாராஷ்டிராவிலும் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மகாராஷ்டிரா நவ்நிர்மான் சேனா தலைவர் திரு. ராஜ்தாக்கரே கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்று மும்பையில் அக்கட்சியின் வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், 96 லட்சம் போலி வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினை தீவிரமாக மேற்கொள்ளுமாறு கட்சியினரைக் கேட்டுக்கொண்டார்.

இதன் மூலம் போலி வாக்காளர்களைக் கண்டறிய வேண்டும் என்றும் திரு. ராஜ்தாக்கரே தெரிவித்தார்.

<<<<>>>>

மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அவர், பூமியைப் பசுமையாக்குவதற்கு இது உதவிடும் என்றார்.

நாள்தோறும் மரம் நடுதல் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையில் போபாலில் உள்ள பூங்காவில் இன்று தாம் மரக்கன்றை நட்டதாக அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான புகைப்படங்களையும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் பகிர்ந்துள்ளார்.

<<<<>>>>

கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவிற்கு மாநில பேரிடர் மீட்பு நிதிக்கான இரண்டாவது தவணையாக ஆயிரத்து 950 கோடி ரூபாயை விடுவிக்க உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஒப்புதல் அளித்துள்ளார்.

இதில் 354 கோடி ரூபாய் கர்நாடகாவிற்கும், ஆயிரத்து 566 கோடி ரூபாய் மகாராஷ்டிராவிற்கும் வழங்கப்பட உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

*PM Sri திட்டத்தில் கேரளா இணைய உள்ளதாக அம்மாநில கல்வியமைச்சர் திரு. சிவன் குட்டி கூறியுள்ளார்.*

*இன்று திருவனந்தபுரத்தில் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு பேட்டியளித்த அவர், இதன் காரணமாக கேரள மாநிலத்திற்கு உரிய மத்திய நிதி கிடைக்கும் என்றார்.*

*இந்த திட்டத்தில் இணைவதால் கேரளாவில் தற்போது செயல்பாட்டில் உள்ள கல்விக் கொள்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் திரு. சிவன் குட்டி தெரிவித்தார்.*

<<<<>>>>

*ஒடிசாவில் 471 கிராமப் பஞ்சாயத்து அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.*

*புவனேஸ்வரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*28 மாவட்டங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக அவர் கூறினார்.*

*கிராமப்புற மேம்பாட்டிற்கு தமது அரசு முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும் திரு. மோகன் சரண் மாஜி தெரிவித்தார்.*

<<<<>>>>

*தீபங்கள் வெற்றியின் சின்னமாக திகழ்கிறது என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.*

*இன்று அயோத்தியாவில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தீபத் திருவிழாவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.*

*கின்னஸ் உலக சாதனையாக 26 லட்சம் தீபங்கள் இன்று ஏற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*உண்மை வெற்றி பெறும் என்பதை தீபங்கள் உணர்த்துவதாகவும் திரு. யோகி ஆதித்யநாத் கூறினார்.*

<<<<>>>>

*செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் முனையமாக ஆந்திரா உருவெடுக்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.*

*இன்று அமராவதியில் இந்திய தொழில் கூட்டமைப்புடன் நடத்தவுள்ள மாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*விசாகப்பட்டினத்தில் அடுத்த மாதம் 14 மற்றும் 15ஆம் தேதிகளில் நடைபெற உள்ள இந்த மாநாட்டில் அதிக அளவு தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு திரு. சந்திரபாபு நாயுடு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.*

<<<<>>>>

*தெலங்கானாவில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான குறைந்தபட்ச வயதினை 25-ல் இருந்து 21ஆக குறைப்பதற்கான சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.*

*இன்று ஹைதராபாதில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசியலில் இளையோர் பங்கு அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்பட உள்ளதாக குறிப்பிட்டார்.*

<<<<>>>>

*சரக்கு மற்றும் சேவை வரி குறைப்பு காரணமாக உணவகங்களில் விற்பனை அதிகரித்துள்ளதாக அதற்கான அகில இந்திய சங்கத்தின் தலைவர் திரு. K.B. Kachru கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்த அவர், சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கும் இது உதவியுள்ளதாகத் தெரிவித்தார்.*

*இதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. Kachru கூறினார்.*

<<<<>>>>

*ஜம்மு-கஷ்மீரை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் ஊடுருவலை முறியடிப்பதற்காக நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாக ராணுவம் கூறியுள்ளது.*

அடுத்த தலைமுறை கண்காணிப்பு கருவிகள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ராணுவத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஆபரேஷன் சிந்தூரின்போது இந்தக் கருவிகள் பயன்படுத்தப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறுவதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இதன் காரணமாக Rafah எல்லை மூடப்படுவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இருப்பினும் இஸ்ரேல்தான் சண்டைநிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் நடத்தியுள்ளதாக ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இதில் 38 பேர் உயிரிழந்ததாகவும், 133 பேர் காயமடைந்ததாகவும் பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

அரபிக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத் தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக கேரளா, தமிழகம், ஆந்திரா, கர்நாடகா மற்றும் லட்சத்தீவு பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடல் பகுதியில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு சென்றுள்ள மீனவர்கள் வரும் 21ஆம் தேதிக்குள் கரை திரும்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் வங்கக் கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 289 ரன் என்ற இலக்கினை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது.

*இந்தூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 288 ரன் எடுத்துள்ளது.*

*Heather Knight 91 பந்துகளில் 109 ரன் குவித்தார்.*

*தீப்தி ஷர்மா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.*

*--------------*

*இந்தியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*பெர்தில் நடைபெற்ற இப்போட்டி மழை காரணமாக 26 ஓவராக குறைக்கப்பட்டது.*

*இதில் முதலில் பேட்செய்த இந்தியா 9 விக்கெட் இழப்புக்கு 136 ரன் எடுத்தது.*

*<<<The End>>>>*